கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி - III– 2009/2010 (நவெம்பர்/டிசம்பர் 2010)

LIBRARY Eastern University, Sri Lanka

# OCC 4101 விழுமியக்கல்வியும் ஆளுமை விருத்தியும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஏதாவது நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01.(அ) விழுமியத்தின் பிரதான வகைகளை முன்வைக்குக.
(05 புள்ளிகள்)

(ஆ) விழுமியத்தின் பண்புகளை முன்வைத்து அவற்றைத் தற்போது மனிதர்கள் கடைப்பிடிக்கும்போது எழும் பிரச்சினைகளையும் விளக்குக.
(06 புள்ளிகள்)

(இ) தற்காலத்தில் மாணவர்களின் ஆளுமை விருத்தியை மேம்படச் செய்ய எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்?
(14 புள்ளிகள்)

02.(அ) ரூசோ, விவேகானந்தர் போன்றோர் முன்வைத்துள்ள பிரதான விழுமியக்கருத்துக்களை முன்வைக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ) தைத்திரிய உபநிடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாழ்க்கைக்கு அவசியமான பன்னிரு இரத்தினங்களையும் விளக்குக.
(15 புள்ளிகள்)

03.(அ) ஆசிய நாடுகளின் விழுமியக்கல்வி தொடர்பாக கல்வியியலாளர்கள் ஆராய்ந்து எடுத்துக்கூறிய பிரச்சினைகளை முன்வைத்து விளக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ) அவ்வாறு முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு முன்வைக்கப்பட்ட அணுகுமுறைகளையும் ஆராய்க.
(15 புள்ளிகள்)

04.(அ) உபநிடத இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விழுமியம் தொடர்பான கருத்துக்களை பின்வரும் தலைப்புகளின் கீழ் ஆராய்க.

1. ரிதம்
2. மனப்பயிற்சி
3. பிரார்த்தனை பூர்வமான வாழ்வு
4. மாணவப்பருவத்தின் அடுத்த கட்டம்
5. ஆசிரியர், மாணவர் உறவு

(25 புள்ளிகள்)

05.(அ) கடந்த காலத்தில் விழுமியக்கல்வி கடைப்பிடிக்கப்பட்ட முறைகளுக்கும் நிகழ்காலத்தில் விழுமியக்கல்வி கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறைகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை ஆராய்க.

(15 புள்ளிகள்)

(ஆ) முழுநலம் என்றால் என்ன? என்பதை விளக்கி சினத்தைத் தவிர்ப்பதற்கு நீர் முன்வைக்கும் வழிமுறைகளையும் தருக.

(10 புள்ளிகள்)

06. இந்தியா, தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா போன்ற ஆசிய நாடுகளினது விழுமியக்கல்வியினது போக்கை இலங்கையோடு ஒப்பிட்டு ஆராய்க.

(25 புள்ளிகள்)

********